www.manthiras.com

# கும்கும மஹிமை

## குங்கும பஞ்சதசி

குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது
குங்கும மாவது குணம தளிப்பது
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பது

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிதனை யாள்வதும் கங்கம மாமே
தஞ்சமென்றொரைத் தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்ச மாபாதகம் பரிந்துமே தீர்ப்பதும்

அஞ்ஜின பேருக் கபய மளிப்பதும்
கஞ்சி காமாஷியின் குங்கும மாமே
நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்கம மாமே

செஞ்சுடர் போல்வது சீரான குங்குமம்
கொஞ்சு மழகைக் கொடுப்பதும் குங்குமம்
அஞ்சு புலன் ளடக்கி யருள்வதும்
கஞ்சி காமாஷியின் குங்குமமாமே

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி வீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த குங்குமமாமே

www.manthiras.com

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி யளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் குங்கமமாமே

நெஞ்சிற கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடுஞ் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
கஞ்சி காமாஷியின் குங்குமமாமே

சிவசிவ என்றும் திருநீறணிந்த பின்
சிவகாமி யேயெனச் சிந்தித்தணிவதும்
தவமான மேலோருந்தரித்துக் களிப்பதும்
பவவினை தீர்ப்பதும் குங்கும மாமே

எவையெவை கருதிடில் அவையவையீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்விட்ட பேருக்குக்
குவிநிதி யீவதும் குங்கும மாமே

அஷ்ட லட்சுமி அருள தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டந் தவிர்ப்பதும் காத்தெனை யாள்வதும்
சிஷ்டராய்ச் செய்வதும் குங்கும மாமே

குஷ்டம் முதலான மாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டும் இரண்டும் அறிவித்தோர் வீடினைக்
கிட்டவே செய்வதும் குங்கும மாமே

www.manthiras.com

பட்டகாலிலே படுமெனக் கஷ்டங்கள்

விட்டிடாமலே வந்துமே வாட்டினும்

பட்டான பார்வதி பாதம் பணிந்தே

இட்டார் இடர் தவிர் குங்கும மாமே

சித்தந் தனைச் சுத்தி செய்வதற் கெளியதோர்

எத்துந் தெரியாத ஏமாந்த மாந்தரே

நித்தம் தொழுதன்னை குங்குமந்தன்னை

நித்தம் தரித்துமே வீட்டை வீரே

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகொள்

செஞ்சுடராகுமோர் கஞ்சி காமாஷியின்

கஞ்ச மலர் முகந்தன்னிற் நிகழ்வதும்

பஞ்ச நிதி தரும் குங்கும மாமே